MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

08-09-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விகாரி வருடம் ஆவணி 22 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 56 | இதழ் 34 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருட்திரு C. அந்தோனி ரோச்

# பெத்தி செமினேர் பள்ளி மாணவர்கள் நீட் தேர்வு மூலம் புதுவை மருத்துவக் கல்லூரிகளில் அதிக இடங்களைப் பிடித்தனர்.



புதுவை பெத்தி செமினேர் பள்ளி மாணவர்கள் ஜிப்மர் நுழைவுத் தேர்வு மூலம் 13 இடங்களைப் பிடித்து சாதனை படைத்துள்ளனர். மேலும் நீட் தேர்வு மூலம் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் அதிக இடங்களைப் பெற்று மிகப்பெரிய சாதனை படைத்துள்ளனர்.

புதுவை அரசின் இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரியில் 15 மாணவர்களும், பிம்ஸ் மருத்துவக் கல்லூரியில் 5 மாணவர்களும், மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரியில் 6 மாணவர்களும், வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரியில் 4 மாணவர்களும் என மொத்தம் 43 மாணவர்கள் இவ்வாண்டு மருத்துவக் கல்லூரியில் இடங்களைப் பெற்றுப் பெத்தி செமினேர் பள்ளி மாணவர்கள் சாதனைப் படைத்துள்ளனர்.

முதன் முறையாக **JEE** நுழைவுத் தேர்வின் மூலம் காரைக்கால் **NIT**-யில் 9 மாணவர்கள் இடம் பிடித்துள்ளனர். மாணவர்களைப் பள்ளியின் முதல்வர் அருட்தந்தை பாஸ்கல்ராஜ் அவர்கள் இதய துடிப்பு மானி (ஸ்டெதாஸ்கோப்) வழங்கிப் பாராட்டினார். இந்நிகழ்வில் மாணவர்களின் பெற்றோரும், பள்ளியின் ஆசிரியர்களும் கலந்து கொண்டு மாணவர்களைப் பாராட்டினர்.

# புதுவை மிஷன் அச்சகம்

## தோள் கொடுப்பீர்! தாங்கிடுவீர்!!

### மிஷன் அச்சக புனரமைப்புக்காக நன்கொடை வழங்கியவர்கள்

சென்ற வார வரவு — ரூபாய் 12,000

1) லம்பார்ட் சஞ்சீவி, புதுவை. — 1000
2) திரு.திருமதி.பொன்னு தாவீது-லியோனி-பிரான்ஸ் — 2000
3) இம்மாகுலேட் சபை, லூர்து அன்னை மாநிலம் — 2,50,000 (பொருட்களாக)
4) பொறிஞர் ரீமன் — 2,50,000 (பொருட்களாக)
5) பெயர் சொல்ல விரும்பாதவர் — 5000
6) நாராயணன் தெரேசம்மாள் ஜோசப் நல்லதம்பி — 15,000
7) மார்ஷல் அருளப்பன், புதுவை. — 5000
8) மரி தெரேசாள், சத்தியமங்கலம். — 1000
9) SL. மரியதாஸ், நெய்வேலி. — 2000
10) ஜான்போஸ்கோ பெரஸ், சென்னை. — 200
11) ஷீலா விக்டர் — 1000
12) அற்புதமரி லப்போர்த் — 1000

தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவிய நல்லவர்களுக்கு நன்றி. மற்றவர்களும் உதவிட அன்பு கலந்த இறையாசீரோடு கேட்டுக் கொள்கிறோம்.

- மேலாளர்.

ஆசிரியர் பேனா...

# மிஷன் அச்சகம் ஒரு வரலாறு

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூரும் அறிவு" ஆற்றில் தோண்டத் தோண்ட நீர் சுரப்பதுபோல, படிக்கப்படிக்க அறிவு சுரக்கும். 'கண்டதை தின்பவன் குண்டனாவான், கண்டதைப் படிப்பவன் பண்டிதன் ஆவான்.' அச்சம் இன்றி, எச்சூழலையும் எதிர்கொள்ளும் ஆற்றலைத் தருவது அறிவு. அது இருளில் நடப்பவருக்கு ஒளிகாட்டும் ஒளி விளக்கு. அவ்வகையில் பலரது நல்வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காய் **மிஷன் அச்சகம்** செயல்பட்டிருக்கிறது.

அறிவை விசாலப்படுத்துவது வரலாற்றுப் பதிவுகள். வரலாறு என்பது ஒருவருடைய, ஒரு சமுதாயத்தினுடைய, ஒரு நாட்டினுடைய கடந்தகாலப் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகள். ஒவ்வொரு சொல்லும் செயலும் வரலாறு படைக்கும் படிகற்கள். நேற்றைய வரலாறு இன்றைய வாழ்க்கை, இன்றைய வாழ்க்கை நாளைய வரலாறு. ஒருவருடைய சொல்லோ செயலோ பலருடைய கருத்தைக் கவர்ந்து சிந்தனையைத் தூண்டி, செயல்களை நெறிப்படுத்தி, நற்பயன் ஏற்படுத்தும் என்றால் அது சிறப்பான வரலாற்றுப் பதிவாகக் கருதப்படும்

**பாரீஸ் அந்நிய வேதபோதக குருக்கள் பணி:** '**புதுவை மிஷன்**' நம்மிடையே பல வரலாற்றுச் சுவடுகளை விட்டுச் சென்றிருக்கின்றது. 1776 முதல் புதுவை மிஷனைச் சார்ந்த பாரிஸ் அந்நிய வேதபோதக குருக்களின் தன்னலமற்றப் பணி நம் மூதாதையர் வாழ்விலும், நம் வாழ்விலும் பல நல்ல மாற்றங்களைக் கொணர்ந்திருக்கின்றது. நம்மில் பலர் கல்வியிலும், பொருளாதாரத்திலும் வளம் பெறவும், சமுதாயத்தில் உயர்ந்து நிற்கவும் அவர்களின் அர்ப்பணப் பணியே காரணம். அவர்கள் சமயப் பணியோடு, சமூகப் பணியும், கல்விப் பணியும், மருத்துவப் பணியும் செய்தார்கள். உயர்ந்து நிற்கும் ஆலயங்களும், சிறப்புமிக்க கல்விக் கூடங்களும், நலம் காக்கும் மருத்துவமனைகளும், நம் பங்குச் சமுதாயமும் இதற்கு அடையாளங்களாக, சாட்சிகளாக அமைந்துள்ளன.

**'மாதா அச்சகம்' தோற்றம்:** சமயப்பணியோடு, சமூகப் பணியையும், கல்விப் பணி மற்றும் மருத்துவப் பணியையும் சிறப்போடு செய்ய உதவும் கருவியாக அவர்கள் சிந்தனையில் வெளிப்பட்டது 'அச்சுப் பணி'. 1830 முதல் 1840 இடைப்பட்ட காலங்களில் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் பலர் பிரிவினைச் சபைகளில் சேர்ந்தனர். இதனைத் தடுக்கும் நோக்கத்துடனும், நற்செய்திப் பணி, சமூகப்பணி, கல்விப் பணி ஆகியவற்றைச் சிறப்பாக செய்யவும், புதுவை மிஷனுக்கென்று ஒரு அச்சகம் தேவை என்று பேரருட்திரு போனான் ஆண்டகை தீர்மானித்தார்கள். அச்சகம் தொடங்குவதற்கான உத்தரவை அரசாங்கத்திடம் இருந்து 1841-ல் பெற்றார்கள். பிரான்ஸ் நிர்வாகம் ஒரு பழைய அச்சு இயந்திரத்தையும், சிறிது மையையும் கொடுத்து உதவியது. பின்னர் புதுச்சேரி அரசில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. கமில் குயேர் (Camile Guerve) என்பவரிடம் இருந்து குறைந்த விலைக்கு அச்சகம் வாங்கப்பட்டது. இந்த அச்சகம் 'சென்மராக்கினி மாதா அச்சகம்' என்றும் 'மிஷன் அச்சகம்' என்றும் அழைக்கப்பட்டது. இதன் முதல் மேலாளர் இறையடியார் அருட்திரு லூயி சவினியென் துப்புயி அடிகள்.

'மாதா அச்சகம்' தொடங்கப்பட்ட நான்கு ஆண்டுகளுக்குள் பல நூறு புத்தங்கள் இங்கு அச்சிடப்பட்டு வெளிவந்தன. (புதுவை மிஷன் வரலாறு, அருட்திரு.P.A.சம்பத்குமார் மற்றும் அருட்திரு. ஆந்திரே கரோப் MEP).

**மறைப்பணி சார்ந்த வெளியீடுகள்:** கிறிஸ்தவ மறையின் பேருண்மைகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும்படி பல புத்தகங்கள் 'மாதா அச்சகத்தில்' அச்சடித்து வெளியிடப்பட்டன. பேரருட்திரு போனான் ஆண்டகை வெளியிட்ட 'சின்ன குறிப்பிடம்' (1837) 'பெரிய குறிப்பிடம்' (1841) போன்ற ஞான உபதேச புத்தகம் மீண்டும் 16ம் பதிப்பு (1950) இங்கு அச்சிடப்பட்டது. மீட்பின் வரலாற்றை சுருங்கச் சொல்லும் 'அன்பின் ஆட்சி' புத்தகம் இன்னும் பலர் நினைவில் நிற்கிறது. இங்கு அச்சிடப்பட்ட 'ஞானசமுத்திரம்' இதுவரையில் 11 பதிப்புகள் செய்யப் பட்டிருக்கிறது. மக்கள் இன்னும் விரும்பி பயன்படுத்தும் இப்புத்தகம் இப்போது 12ம் பதிப்பு செய்யப்படுகிறது. 'ஓர் ஆன்மாவின் வரலாறு' துறவியர் மத்தியில் போற்றப்படுகிறது.

**சமுதாய அக்கறை:** சமுதாய வளர்ச்சிக்கான பல நூல்கள் இந்த 'மாதா அச்சகத்தால்' வெளியிடப் பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு 'குடியர்கள் சிறு புஸ்தகம்' என்று 32 பக்க பாக்கட் அளவு புத்தகம் வியப்புக்குறியது. 28-7-1919 இதன் 4ம் பதிப்பு 1932ல் வெளி வந்துள்ளது. இன்னும் வியப்புக்குரியது. இதில் குடியர்கள் திருக்குறள் என்று 16 குறள்கள் உள்ளன.

*'மதுமிகுதி யாலே மயங்குந் திறத்தர்*
*சாதநந்தன் வீடடையார் சாற்று'*

**அறிவுப் புதையல்கள்:** 'மாதா அச்சகத்திலும்', பிற அச்சகங்களிலும் பிரசுரிக்கப்பட்ட தமிழ் நூல்கள் பல இங்கே இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

'வீரமாமுனிவரின் தமிழ் இலக்கண விளக்கம் (1876);

'La Légende de 'Skanda'selon le Kandapuranam tamoul et l'icorrographic (1967).

`The Madras year book 1923'

'Abstract of Statistics for Pondicherry state (1958)'

'Monographie Des cultures All cambodie'

'Pondicherry Porte de l'inde (1999)'

`The Portuguese and the Socio-Cultural changes in India 1500-1800'

'Nomenclature Raisonnée Des Différents Products de l'Inde'

'தேம்பாவணி'

'கிறிஸ்துநாதர் அனுசாரம்'

போன்ற அரிய நூல்கள் இங்கே நமக்கு அறிவுப் புதையல்களாக கிடைக்கின்றன. மேலும் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளிலும் பல அரிய நூல்கள் நம் அலமாரியிலே அடங்கிக் கிடக்கின்றன. வார இதழ்கள், மாத இதழ்கள் குறிப்பாக 1907ம் ஆண்டிலிருந்து வெளிவரும் 'சர்வவியாபி' போன்றவையும் பாதுகாக்கப் படுகின்றன.

மிஷன் அச்சகம் என்று இன்று பலருக்கும் அறிமுகமான 'மாதா அச்சகம்' ஓர் அறிவுச் சுரங்கம். வரலாறு, சமயம், இலக்கியம், மருத்துவம், அரசியல் போன்ற எத்துறையிலும் ஆய்வுக்கான நூல்கள் இங்கே சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப் படுகின்றன. இந்த அச்சகம் மக்களை அறிவிலும், இறைநம்பிக்கையிலும், சமூக நல்லுறவிலும் வளர்த்தெடுத்த வரலாற்றுப் பெருமைக்குரியது. இன்றும் தன் கடந்தகால வரலாற்றை மறக்காமல் இது தொடர்ந்து வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்றது. இந்த அறிவுச் சுரங்கத்தில் புதைந்து கிடக்கும் புதையல்களைக் கண்டெடுத்து பயன் பெறுவோம் வாரீர்.




ஆண்டின் பொதுக்காலம் 24ம் ஞாயிறு (15-09-2019)

# "காணாமல் போன உறவு"

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப் பள்ளி,
புதுவை.



இன்று காணாமல் போன மனிதர்கள், வீட்டு விலங்குகள் மற்றும் பொருட்கள் என நிறைய விளம்பரங்கள் பொது இடங்களில் ஒட்டப்படுகின்றன. செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சியிலும் கூட ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. வீட்டைவிட்டு காணாமல் போனவர்கள், போர் மற்றும் இயற்கைச் சீரழிவுகளினால் இடம் பெயர்ந்து காணாமல் போனவர்கள், திருவிழாக்களில் காணாமல் போனவர்கள், பகை மற்றும் வன்முறையால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என எண்ணற்ற காணாமல் போனவர்களைப் பற்றி கேள்விப்படுகின்றோம். இறந்தவர்களும் காணாமல்தான் போகிறார்கள். ஒருவரின் இறப்பு நாம் அவரைத் தேடுவதை நிறுத்திக்கொள்ள வைக்கிறது. ஆக, ஒருவர் சாதாரணமாகக் காணாமல்போய் இருந்தாலும் நாம் தேடுவதில்லை, இறந்து காணாமல்போய் இருந்தாலும் அவரைத் தேடுவதில்லை. இந்த நவீன உலகில் கடவுளை நாம் தொலைத்துவிட்டோம். நம் உறவுகளையும் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். காத்துக்கொண்டிருக்கும் இறைவனிடம் நம் உறவினை புதுப்பித்துக் கொள்ளவும், காணாமல் போன உறவுகளை நாம் தேடிச் செல்லவும் இன்றைய ஞாயிறு இறைவார்த்தை வழிபாடு நமக்கு அறிவுரை வழங்குகிறது.

**மூன்று உவமைகள்:** இன்றைய நற்செய்தியில் காணாமல் போன ஆடு, நாணயம் மற்றும் மகன் என்று தொடர்ந்து மூன்று உவமைகளை முன்வைக்கிறார் இயேசு. இயேசு சொன்ன இந்த உவமைகளின் பின்புலம் என்னவென்றால் விருந்து நடக்கும் இடம் மற்றும் இயேசு பாவிகளோடு உணவருந்து கிறார். அவரின் செயலைக் கண்ட பரிசேயர்களும், மறைநூல் அறிஞர்களும் அவருக்கு எதிராக முணுமுணுக் கின்றனர். ஆனால் இயேசு இந்த மூன்று உவமைகளையும் கூறுவதன் வாயிலாக பாவிகள் மனம் மாறினால் அவர்களுக்கும் மீட்பு உண்டு என்பதை எண்பித்துக் காட்டுகின்றார். மேலும், இந்த மூன்று உவமைகளுமே ஒரு குறிப்பிட்ட வரிசை நிகழ்வுகளைக் கண்டுபிடிக்கின்றன. காணாமல் போதல் - உரிமையாளர் தேடுதல் - கண்டு பிடித்தல் - கொண்டாடுதல். இந்த நான்கு செயல்பாடு களையும் கூறி காணாமல் போனவர்கள் மீண்டும் மனம் திரும்பும்போது விண்ணகத்தில் எந்த அளவிற்கு மகிழ்ச்சி உண்டாகும் என்பதை இயேசு படம் பிடித்துக் காட்டுகின்றார்.

**வித்தியாசம்:** இயேசு தொடர்ந்து மூன்று உவமைகளை முன்வைத்தாலும், மூன்றாவதாகக் கூறிய 'ஊதாரி மைந்தன்' உவமை மிகவும் வித்தியாசமானது, மிகவும் முக்கியமானது. முதல் வித்தியாசம் என்னவென்றால் முதல் இரண்டு உவமை களில் காணாமல் போனது விலங்கு மற்றும் பொருள். ஆனால் மூன்றாவதாகக் கூறப்பட்ட 'ஊதாரி மகன்' உவமையில் காணாமல் போனது மனித உயிர். விவிலியத்தில் தொடக்க நூலில் கடவுள் படைத்த படைப்புகளிலே மனித இனத்தை உயர்ந்த நிலையில் படைத்தார் என்று வாசிக்கின்றோம். எனவே மனித உயிர் மிகவும் முக்கியமானது. இரண்டாவது வித்தியாசம், காணாமல்போன ஆட்டையும் நாணயத்தையும் அவற்றின் உரிமையாளர் தேடுகின்றனர். ஆனால் காணாமல் போன (உதாரி) மகன் உவமையில் அவரின் தந்தை தேடினாரா? இல்லை. மாறாக, தந்தை மகனுக்காக காத்துக் கொண்டிருக்கிறார். அப்படியிருக்க யார் காணாமல் போன மகனைத் தேடியது? யார் கண்டு கொள்கிறார்? இளைய மகன் முதலில் தன்னையே கண்டுபிடித்துக் கொள்கின்றார். கடவுள் நம் எல்லோருக்கும் சுதந்திரத்தைக் கொடுத்திருக் கிறார். எனவே கடவுளுக்கு எதிராகவும் தன் தந்தைக்கு எதிராகவும் பாவம் செய்து காணாமல்போன தன் உறவை இளைய மகன் புதுப்பித்துக் கொள்கின்றார்.

**மூத்த மகன்:** பெரும்பாலும் நாம் 'ஊதாரி மகன்' உவமையில் இளைய மகனைப் பற்றி விவரித்துவிட்டு மூத்த மகனைப் பற்றிக் கண்டுகொள்ளாமல் விட்டு விடுகின்றோம். ஆனால் விரிவாக ஆய்ந்து விவரிக்கப்பட வேண்டியவர் இவரே. ஏனென்றால், இளைய மகன் காணாமல் போய் மீண்டும் தன் உறவைப் புதுப்பித்து விட்டார். ஆனால் மூத்த மகன் அவ்வாறு இல்லை. தந்தை திரும்பி வந்த இளைய மகனுக்கு கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும், உடலுக்கு ஆடையும் அணிவிக்க வீடே விருந்தின் உச்சத்தில் மகிழ்ச்சியில் தத்தளிக்கின்றது. இயேசு இந்த இடத்தில் உவமையை நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவர் தொடர்கிறார். இவ்வளவு நேரம் திரைக்குப்பின் இருந்த மூத்த மகன் உள்நுழைகின்றான். தன் தந்தைக்கு அருகில் இருந்தாலும் அவன் இன்னும் காணாமல் போய்தான் இருக்கின்றான். காணாமல் போன தன் நிலையை கண்டு கொள்ளாமல்தான் இருக்கின்றான். ஆகையால்தான் தன் தம்பியைஇ தம்பி என்றுகூட ஏற்றுக் கொள்ளாமல் "உன் மகன்" என்று மூன்றாம் நபரில் அழைக்கின்றார். மேலும் சினமுற்று வீட்டிற்குள்ளே போக விருப்பம் இல்லாமல் இருந்த அவரை அவருடைய தந்தை வெளியே வந்து உள்ளே வருமாறு அவரைக் கெஞ்சிக் கேட்கின்றார். இளைய மகன் தன்னையே கண்டுகெண்டதால் மகிழ்ச்சி அடைகின்றான். மூத்த மகன் தன்னையே கண்டு கொள்ளாததால் இன்னும் காணாமல் போனதாகவே இருப்பதால் விருந்தின் மகிழ்ச்சியில் (கடவுளின் அன்பில்) பங்குகொள்ள மறுக்கின்றான்.

**காணாமல் போன உறவு:** இன்று மனிதர்கள் பொருட்களிலும், செல்வத்திலும், வீண் புகழ்ச்சியிலும் தன் மகிழ்ச்சியை தேடிக் கொண்டிருக்கிறார்கள். கடவுளோடு உள்ள உறவை தொலைத்துவிட்டார்கள். எல்லாவற்றையும் இழந்த பிறகு மகிழ்ச்சியை மனநிம்மதியை இழந்த பிறகு கடவுளைத் தேடி ஓடி வந்து காணாமல்போய் இருந்த உறவை புதுப்பித்துக் கொள்கிறார்கள். இந்த உறவை தினமும் புதுப்பிக்கலாம். தினமும் இறைவன் மீது ஆழ்ந்த இறை நம்பிக்கை கொள்ளலாம். மேலும் இன்றையச் சூழ்நிலையில் அறிவியல், சமூகம், உளவியல் மற்றும் கல்வித்துறையில் மிகப்பெரும் முன்னேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இம்முன்னேற்றங்கள் மனிதர் களிடையே உறவுகளை வளப்படுத்துவதற்குப் பதிலாக பிளவுபடுத்திக் கொண்டிருப்பதை யாராலும் மறுக்க இயலாது அறிவியல் வளர்ச்சியின் பக்க விளைவாக சுயநல முன்னேற்றம், போட்டி, பொறாமை, பழிவாங்கல், ஏமாற்றுதல், பிறர் பெயரை கெடுத்தல் போன்ற எத்தனை உறவுச் சிக்கல்கள்!!! குடும்பத்தில், நண்பர்களிடத்தில், சமுதாயத்தில் நம் உறவுகள் காணாமல் போய் கொண்டிருக்கின்றது. இன்றைய நற்செய்தியின் கதாநாயகன் காணாமல் போன மகன், காணாமல் போன தன் உறவை புதுப்பித்ததுபோல் நாமும் கடவுளோடும் உடன் வாழும் மனிதர்களோடும் காணாமல் போன உறவை மீட்டுக் கொள்வோம். கடவுளையும் மனிதர்களையும் கண்டு கொள்வோம். ●



# வரங்களின் வாய்க்கால்கள்...10

**Dr.Sr.M.லில்லி மரி** ME, புதுச்சேரி.

**சிலுவை:** விரிந்த தன் இரு கரங்களில் இருந்து வரங்களை மடை திறந்த வெள்ளம்போல வாரி வழங்கிக் கொண்டிருக்கும் திருச்சிலுவை வரங்களின் வாய்க்கால் அல்லவா! சிலுவை அடையாளத்தை நம் மீது பக்தியுடன் வரையும் ஒவ்வொரு முறையும் அது நமக்கு வரங்களை வாரி வழங்குகிறது என்பதைப் பல புனிதர்களுடைய வரலாறுகளில் இருந்து அறிகிறோம். முதலில் அந்தச் சிலுவையின் மகத்துவம் பற்றி அறிந்து கொள்வாம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக கல்வாரி மலை மீது மூன்று சிலுவைகள் நாட்டப்பட்டிருந்தன. அந்தச் சிலுவைகள் மீது மூன்று மனிதர்கள் மரண வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் மட்டும் தன் சிலுவையால் உலக வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு முத்திரையைப் பதித்தார். அன்று முதல் அவரைத் தாங்கி நின்ற மரச்சிலுவை மட்டுமல்ல எல்லாச் சிலுவைகளுமே புனிதமானது.

உலகின் கோடிக்கணக்கான ஆலயங்களின் முகட்டில் திருச்சிலுவை நாட்டப்பட்டுள்ளது. பல கோடி மக்களின் நெஞ்சில் சிலுவையின் சின்னம் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு நாளில் பல முறை தங்கள் மீது சிலுவை அடையாளம் வரைந்து கொள்கின்றனர்.

பல மறைசாட்சியர் மரத்தால் செய்யப்பட்ட ஒரு சிலுவையை மிதித்துச் சென்றால் வாழ்வு, தாண்டிச் சென்றால் மரணம் என்று அச்சுறுத்தப்பட்ட போது கூட மிகுந்த வணக்கத்துடன் அந்தச் சிலுவையை மண்டியிட்டு வணங்கிச் சென்றதால் கொடிய வேதனைகளை அனுபவித்து உயிர்விட்ட கிறிஸ்தவர்கள் பலர்.

சிலுவையால் தன் வரலாற்றையும் தன் போதனையையும் எழுதியவர் சாதாரண மனிதர் அல்லர். அவர் "இறைமகன்." மனுக்குலத்தை மீட்கக் கடவுளால் அனுப்பப்பட்டவர் அவர். இரு கள்வர்கள் மத்தியில் ஒரு குற்றவாளியைப்போல சிலுவை மரணத்தை அனுபவித்தார். எப்படிப்பட்ட மரணத்தால் இயேசு இறக்க வேண்டும் என்று கடவுளே தேர்வு செய்தார்.

**சிலுவை எதற்கு?** கலாத்தியர் 3.13 - இல் இவ்வாறு குறிக்கப் பட்டுள்ளது: "மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர்" என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்குள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார்."

இயேசு வேறு விதமாகக் கொல்லப்பட்டிருந்தால் இயேசுவின் மரணத்துக்கு இன்று உள்ள உயர் மதிப்பும் அவர் போதனைக்கு இத்துணை ஆற்றலும் இருந்திருக்காது. அவர் பரிசேய முறைப்படி கல்லால் எறிந்து கொல்லப்பட்டிருந்தாலோ அல்லது வேறு ஒரு சூழ்ச்சியால் மரணம் அடைந்திருந்தாலோ உலக மக்களின் அன்பையும் நம்பிக்கையையும் இந்த அளவு பெற்றிருக்க முடியாது.

நம் பாவங்களின் பொருட்டு நாம் சபிக்கப்பட்டவர்களானோம். இயேசு கிறிஸ்துவே சிலுவையின் மீது உயிர் விடும்போது அந்தச் சாபத்தைத் தன் மீது ஏற்றார். மீட்பு என்று நாம் மிகச் சாதாரணமாகப் பேசுகிறோம். ஆனால் அது சிலுவை மீது இறை மகன் உயிர்த் தியாகம் செய்ததால் சாத்தியமாயிற்று. கிறிஸ்து வினுடைய மரணத்தின் முழு பொருளையும் நாம் சிலுவையில் காண்கிறோம். மனிதனின் சாபம் ஒரு புறமிருக்க, கடவுள் தம் மகனுக்கு மாண்புக்குரிய ஒரு மரணத்தைத் திட்டமிடவில்லை.

"நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம். அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் **சிலுவையை** ஏற்றுக்கொண்டார். இப்போது கடவுளது அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்" (எபி.12.2).

கடவுளுடைய திருவுளம் மட்டுமல்ல, இயேசுவே அதை விரும்பி ஏற்றார். தந்தை தனக்கு அளித்த பணியைச் செய்து முடிக்க மிகுந்த தாழ்ச்சியாடு சிலுவை மரணத்தை ஏற்றார். எனவேதான் இயேசுவால் 'என் பெயரால் தந்தையிடம் எதைக் கேட்டாலும் அவர் உங்களுக்கு அதை அருள்வார்' என்று வாக்களிக்க முடிந்தது. எனவே சிலுவை வரங்களின் வாய்க்கால் என்பது நமக்குப் புரிகிறது.

சிலுவை என்னும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் மட்டும் **முப்பது** முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

1. "நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்" (மத் 7:17). நல்ல கனி கொடுத்த நல்ல மரம் **சிலுவை** மரமே!

இயற்கையில் காணும் ஓர் உண்மையைச் சொன்னாலும் இயேசு தானே நல்ல கனி தரும் மரமாக சிலுவையோடு இணைத்துக்கொள்ளப் போகிறார் என்பதை முன் கூட்டியே சொல்லிவிட்டார்.

2. "தம் **சிலுவையைச்** சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்" (மத் 10:38). தம் தந்தை தனக்களித்த பணியைச் சிலுவைச் சாவை ஏற்பதால் நிறைவேற்ற வந்தார். எனவே தன் பணியைத் தொடர்ந்து செய்ய விரும்புவோர் அந்தச் சிலுவையில் பங்கு பெற வேண்டும் என்று கேட்பது சரியானதே.

3. "அப்போது அவர் பரபாவை அவர்கள் விருப்பத் திற்கிணங்க விடுதலை செய்தான். இயேசுவைக் கசையால் அடித்துச் **சிலுவையில்** அறையுமாறு ஒப்புவித்தான்" (மத் 27:26). மக்களின் விருப்பத்திற்கேற்ப பரபா விடுதலை செய்யப் பட்டார். ஆனால் இயேசுவோ அவருடைய தந்தையின் விருப்பத் திற்கிணங்க சிலுவையில் அறையப்பட ஒப்புவிக்கப்பட்டார்.

4. "பின்பு அவர் மக்கள் கூட்டத்தையும் சீடரையும் தம்மிடம் வரவழைத்து, 'என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் **சிலுவையைத்** தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (8:34).

சிலுவையைத் தூக்க உடல் பலத்துக்கும் மன பலத்துக்கும் மேலாக தன்னலத் துறவு தேவை என்கிறார் இயேசு. சிலுவை எந்த அளவு துன்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் இன்றைய பேச்சில் 'அது எனக்குத் துன்பமாக இருக்கிறது என்பதை எனக்குச் சிலுவையாக இருக்கிறது' என்று கூறுகிறோம்.

5. "அவர்கள், 'அவனைச் **சிலுவையில்** அறையும்' என்று மீண்டும் கத்தினார்கள்." அதற்குப் பிலாத்து, 'இவன் செய்த குற்றம் என்ன?' என்று கட்க, அவர்கள், 'அவனைச் சிலுவையில் அறையும்' என்று இன்னும் உரக்கக் கத்தினார்கள் (மார்க் 15:13-14).

பிலாத்துவின் கேள்வியே இயேசு குற்றமற்றவர் என்று எண்பிக்கிறது. அவர் கள்வர் நடுவில் தொங்கினாலும் குற்ற மற்றவர் என்று பிலாத்துவின் கேள்வியாலேயே எண்பிக்கப் படுகிறது. மேலும் சிலுவையின் மீது தொங்கவிடப்பட்ட குற்றப்பலகையிலும் "நாசரேத்து இயேசு யூதர்களின் அரசர்" என்றுதான் எழுதப்பட்டிருந்தது. சிலுவையே இயேசு குற்றமற்றவர் என்பதற்குச் சான்று.

6. "தம் **சிலுவையைச்** சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது" (லூாக் 14:27).

இயேசுவுக்குப் பக்தகோடிகள் பலர் உண்டு. ஆனால் அந்த அளவு சீடர்கள் உண்டா என்பது கேள்விக்குறி. இயேசுவின் சீடர்கள்தாம் உண்மையான கிறிஸ்தவர்கள். - தொடரும்



# குல தெய்வனுபவம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

கடவுள் மீது அனைவருக்கும் நம்பிக்கை உண்டு என்று கூற இயலும். எவ்வாறு நம்புகின்றனர் என்று நமக்குத் தெரிவது கடினம். நாம் ஒரு சில அடையாளங்களை வைத்து நம்புகிறோம். நமக்குத் தெரிவது ஓரளவுதான். ஓரளவு ஞானத்தை வைத்துக் கொண்டு எல்லாருக்கும் நாம் முடிவெடுக்க முடியாது, கூடாது. கடவுள் எப்படித் தன் பிள்ளைகளை நிபந்தனையின்றி அன்பு செய்வதுபோல அப்படியே நாமும் நம்ப வேண்டும். கடவுள் அனுபவம் அளவில்லாதது. இருப்பினும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குழுவும் தனிப்பட்ட முறையில் அனுபவிப்பதுண்டு. அத்தகைய அனுபவமே குலதெய்வ அனுபவம் என்கிறோம். பிற மறையினர் குறிப்பாக இந்துக்கள் மத்தியில் பல்வேறு குலதெய்வங்கள், குலதேவதைகள் உண்டு. ஆனால் கிறிஸ்தவர்களுக்கு இயேசு ஒருவர்தான் குலதெய்வம், மற்ற புனிதர்கள் எல்லோரும் பக்திக்குரியவர்கள். இயேசுவையும் புனிதர்களையும் ஒரே நிலையில் வைத்திருப்பது உகந்ததல்ல. இயேசுவுக்கும் எனக்கும், எனது குழுவிற்கும் எத்தகைய பக்தி உறவு நிலவி வருகிறது என்று கூர்ந்து கவனிப்பது நல்லது.

**இயேசுவும் நானும்:** ஞான வழி, பக்தி வழி, கர்ம வழியில் எனக்கும் இயேசுவுக்கும் எப்படிப்பட்ட பக்தி உறவு இடம் பெற்று வருகிறது? ஞானவழியில் நான், இயேசு என்ற இருமைக்கு இடமில்லை, இருவரும் ஒருவரே என்ற ஐக்கியம் இடம் பெறுகிறது அல்லது இயேசு நான் என்று பக்தியில் இரு இடம் பெறுகிறது. கர்ம வழியில் 'இயேசு' கர்த்தாவாக நான் கருவியாக இடம் பெறுகிறது.

ஒருவர் தனது மெய்உருவை உணர்வது முக்கியம். ஒருவருடைய மெய் உரு கடவுளின் சாயலாகும். அந்த சாயலின் வடிவம்தான் இயேசு. வாழ்கிறேன் நான் அல்ல இயேசு என்னில் வாழ்கிறார் என்பதே ஒருவருடைய மெய் உரு. ஆனால் நடைமுறையில் நான்- இயேசு என்ற போராட்டம் இடம் பெற்று வருகிறது. முற்றிலும் ஒருவர் தன்னை இயேசுவில் இழந்து புதிய இயல்போடு வாழத்தான் புனித பவுலடியார் அழைக்கின்றார். இருப்பினும் நம்முடைய தனித்தன்மை, குழுத்தன்மை தொடர்ந்து இடம் பெறுவதால் தொடர் முயற்சி எப்போதும் தேவைப்படுகிறது. நமது ஆதாயத்திற்காக இயேசுவைப் பயன்படுத்துவது உகந்ததல்ல. இயேசு மயம் என்னில் என்றும் வளர முயல்வது முறையாகும்.

**இயேசுவும் நாமும்:** தன்னிலே ஒருவர் வெற்றி பெற்றிடின் குழும உணர்வு மேலெழுவது எளிதாகும். குழுவில்தான் திருஅவை மலர்கிறது, கிறிஸ்தவக் குடும்பம் மலர்கிறது. இன்றையச் சூழ்நிலையில் நம்மிடம் நம்பிக்கை கடுகளவு இருந்தால்தான் இயேசுவின் பிரசன்னத்தை உணர இயலும். இவ்வுலகின் கவர்ச்சி இன்றைய தலைமுறையை முற்றிலும் தன்பக்கம் ஈர்த்துக் கொள்கிறது. இயேசுவின் தாகம் மிகவும் தணிந்து வருகிறது. உலகத்தின்மீது தாகம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் பெற்றோர் வழிகாட்டிகள் விரும்பினாலும், எடுத்துக்காட்டுகளாய் இருந்து கடவுளின் கிருபையால் மக்களை இயேசுவிடம் சுதந்திரத்தோடு அழைத்துச் செல்ல முயல்வோம். உணர்வுகளையும், சிந்தனைகளையும் கடந்து ஆவியால் ஈர்க்கப்படின் மிகுந்த பலன்தரும். நமது சிறுமுயற்சியும் கடவுளின் கருணையும் இயேசுவின் இரக்கமும் நம்மைவிட்டு விலகாது. உயர்வு தாழ்வு இடம் பெற்றிடினும் பணிவோடு துணிந்து பயணத்தைத் தொடர்வோம்.

**உயிர்த்த ஆண்டவர்:** வரலாறும் மறைபொருளும் உயிர்த்த ஆண்டவரில் முழுமைப் பெறுகிறது, நிறைவடைகிறது. உயிர்த்த ஆண்டவரில் எல்லாம் நிறைவேறுகிறது என்பதைப் புரிந்துகொண்டு நம்புவோம். இப்படிப்பட்ட இயேசுவை படைப்பும், மனித குலமும் பல்வேறு நிலைகளில் அனுபவித்து வருவதை கிறிஸ்தவர்களாகிய நாம் திறந்த மனதோடு ஏற்றுக் கொண்டு, மற்ற மக்களில் இயேசுவின் நம்பிக்கையை அவர் அருளோடு உள்வாங்குவது நல்லது. அனைத்தும் உயிர்த்த ஆண்டவரில் இருப்பதால் வேறு குலதெய்வம் கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களுக்குத் தேவை இல்லை. உயிர்த்த ஆண்டவர் மீது துவக்கத் திருச்சபையில் படிப்படியாக வளர்ந்து வருகிறது, ஆவியின் பொழிவில் உறுதியாகி பகிர்ந்து கொள்ளப்படுகிறது. தூய ஆவியின் ஆற்றலைப் பெற்ற திருத்தூதர்கள் எவ்வளவு ஆர்வத்தோடும் தைரியத்தோடும் பகிர்வதைத் திருத்தூதர் பணி நூலிலிருந்து நாம் அறிந்துகொள்ள முடியும். உயிர்த்த ஆண்டவரை நாம்பயன்படுத்துவதுண்டா அல்லது அவர் நம்மை பயன்படுத்துகிறதுண்டா அல்லது இரண்டும் கலந்து இடம் பெறுவதுண்டா என்று நாம் அடிக்கடி சீர்தூக்கி பார்ப்பது மேலானது. இதுவே நமது நம்பிக்கையின் ஆழத்தைப் பலப்படுத்தும், சாட்சிய வாழ்வு கனி தரும்.

தான், தனது என்பதை யார் வாழ்நாள் முழுவதும் மிகவும் கவனத்தோடு மேற்கொண்டு, நாம் நமது என்பதில் வளர்ந்து நிறைவாக எல்லாம் இயேசுவே என்ற வாழ்வுணர்வு இடம் பெறுவது ஞான வாழ்வின் முதிர்ச்சியாகும். இவ்வாறு இயேசு நம்மில் வளர்ந்து வருவதை நாம் நமது வாழ்வின் அனுபவம், கனிகள் இவைகளை இன்னமும் வைத்துக் கணக்கிட இயலும். உயிர்த்த ஆண்டவர் மீதுள்ள ஆர்வம் நம்மை ஆட்கொள்வது எவ்வளவு மேலானது என்பதை அனுபவத்திலிருந்து நாம் உணர இயலும். இவ்வாறு அவரால் நாம் இயக்கப்பட்டால் நற்செய்திக்காக, இயேசுவுக்காக நாம் துன்பப்பட்டாலும் இதயத்தின் ஆழத்தில் அமைதி இடம் பெறும்.

இவ்வற்புதமான அருட்பணியில் நாம், குருக்கள், துறவிகள் முன்னணியில் இருக்க அழைக்கப்படுகிறோம். நம்மைத் தொடர்ந்து வரும் அலகை பணத்தை முன்வைத்து நம்மைக் கவர்ச்சிக்கு அழைத்துச் செல்லும், விழிப்பாய் இருப்போம். இயேசு அலகையைச் சந்தித்ததுபோல நாமும் பல்வேறு விதத்தில் சந்திக்க வாய்ப்புகள் பல உண்டு. ஞானக் காரியங்களை முன் வைத்தே நம்மிடம் அலகை விளையாடும். நமது கடந்த கால அனுபவங்கள், மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வது கடவுள் காட்டும் படிக்கற்களாகும். அவரின் அருளால் அனைத்தும் இயலும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் நமது தாய் மரியாளைப்போல வாழ்வோம், வளர்வோம், சான்று பகர்வோம், மகிழ்வோம் வாழ்வோம், வாழ வைப்போம் மரியே வாழ்க!

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்து சிறப்புப் போட்டி-193



**ஆகஸ்ட் மாத வெளியீடு. (2019)**

அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.

ஆயரின் ஆசியுரை

கிறிஸ்துவில் எனதன்பு இறைமக்களே!

விவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன் என்னும் ஆன்றோரின் கூற்றிற்கு ஏற்ப கிறிஸ்தவ நம்பிக்கையை வாழ்வதற்கு விவிலிய அறிவு மிகவும் அவசியம். மக்கள் விவிலியத்தில் ஆர்வம் காட்ட அவர்களைத் தூண்டி எழுப்பும் ஒரு கருவியாகத் தூய பேதுரு விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி செயல்பட்டு வருகிறது. இதன் 193-வது சிறப்புப் போட்டியில் அனைவரும் பங்கேற்று விவிலிய அறிவில் வளர உங்களை வாழ்த்துகிறேன். இந்த விவிலியப் போட்டியைக் கடந்த 16 ஆண்டுகளாக நடத்தி வரும் அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களும் ஆசீரும்.

மேலும் இந்த விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி மக்களை எளிதாகச் சென்றடைய ஓர் பாலமாக அமைந்திருக்கும் சர்வவியாபி வார இதழின் உரிமையாளர் புதுவை-கடலூர் பேராயர் டாக்டர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் மற்றும் இதழின் இந்நாள் ஆசிரியர் பேரருள்பணி A. அருளானந்தம் அவர்களையும், ஒவ்வொரு மாதமும் பரிசு உதவிகளை வழங்கி வரும் உபகாரிகளையும் வாசகப் பெருமக்களையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

இறையாசீருடன் மேதகு ஆயர் S. **சிங்கராயன்**
சேலம் ஆயர்.

- குறிப்பு: பதில்களை 26-10-2019 க்குள் அனுப்பி வைக்கவும்.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
- பதிலை அதிகாரம் வசனத்துடன் அலைபேசி எண் சரியான முகவரியுடன் இணைத்து அனுப்பவும்.
- சிறப்புப் போட்டியாக இருப்பதால் குலுக்கல் முறையில் முதல் 40 நபர்களுக்கு பரிசுகளும், அடுத்து வரும் 35 நபர்களுக்கு சர்வவியாபி இதழ் ஓராண்டிற்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- பதில்களை Inland Letter அல்லது 5 ரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.
- தமிழகத்தின் இரண்டாவது இதழும் 113 வயதுள்ள சர்வவியாபி வார இதழைப் பற்றி குறைந்தது 25 நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி புதிய சந்தாதாரர்களை சேர்க்க முயற்சி செய்வது விவிலிய வாசகர்களின் கடமை. எனவே தயவு கூர்ந்து உதவி செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

### இடமிருந்து வலம்:

1. அங்கு ..................என்னும் ஊரில் தம் சீடருடன் தங்கியிருந்தார்.
3. ஆனால்.............அவருக்குக் கொடுப்பார் இல்லை.
5. நாடெங்கும்..............பஞ்சம் உண்டானது.
7. ..................அவரிடம் வந்து பாரும் என்று கூறினார்.
8. நான் .............பார்வை பெற வேண்டும்.
9. அதைக் கேட்ட பலர் .................ஆழ்ந்தனர்.
17. உங்களிடம்...............இல்லை.
18. நான் அவரிடமிருந்து...............
20. கிழித்துவிடும்.................பெரிதாகும்.

### வலமிருந்து இடம்:

2. அங்கே ஒரு............மீது ஏறி அமர்ந்தார்.
4. ...............அவரைப் பாலை நிலத்திற்கும் இழுத்துச் செல்லும்
10. எப்பதிலும் கூறவில்லை ஆகவே............வியப்புற்றான்.
12. அவனோடு.............முழுவதும் கலங்கிற்று.
13. நிமிர்ந்து...........வெளிகளைப் பாருங்கள்.
15. நீ.................வந்தவன் என்று கேட்டான்.
16. மீண்டும்.................அவரிடம் வந்து கூடினர்.
19. .............என வழங்கப்படும் மலை அருகிலுள்ள............
21. உங்களுக்குச் சொல்கிறேன்...............வந்து விட்டார்.

### மேலிருந்து கீழ்:

1. ஆரோனின் வழி வந்தவர் அவர் பெயர்...............
2. அவர்களைக் கூர்ந்து நோக்கி.................இது இயலாது.
3. அதுவே .................அழிவு.
8. அச்சகோதரர் இருவர்.........கோபங் கொண்டனர்.
16. அவர்.............மொழி எதுவும் கூறவில்லை.

### கீழிருந்து மேல்:

4. ....................பற்றிய அவர்கள் கருத்து தவறானது.
6. ....................தான் உடலுக்கு விளக்கு.
11. என்னை விட்டுப்................உங்களால் எதுவும் செய்ய இயலாது.
13. அவர்களோ........................விரும்பவில்லை.
14. ................மொழிகளைப் பேசுவர்.
15. ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர் அவ்வூரின் பெயர்............................

**மத்தேயு நற்செய்தி முதல் யோவான் நற்செய்தி வரை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | | | 2 |
| | | 8 | | | | | | | |
| | 6 | | ■ | | | 13 | | | |
| 5 | | | | | | 12 | 14 | | |
| | | | | 16 | 9 | | | 11 | |
| | | | 10 | | 17 | | | | |
| 3 | | | | | | 7 | | | |
| 18 | | | | | | | | 21 | |
| | 20 | | | | | | | 19 | |
| | | | | | 15 | | | | 4 |

பதில் அனுப்ப வேண்டிய முகவரி:
அருட்சகோதரர் **அ.மே.ஜேம்ஸ்**
**தூய பேதுரு விவிலிய குறுக்தெழுத்துப் போட்டி - 193**
தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம் - 638 656, திருப்பூர் மாவட்டம்.
செல்: 95979 75430

**திருத்தம்: தலையங்கம் பகுதி.**

**சமய பகைமையுணர்வு** பாராவின் 12 ம் வரியில் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கும் இறையாண்மைக்கும் கலங்கம் ஏற்படுத்துகின்றனர் என்றால் அது மிகையாகாது என்று திருத்தி படிக்கவும்.

# இறையாட்சிப் பணியில் பெண்கள்

- அருட்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM கடலூர்

## கருத்துரை-4

## ஈசாக்கின் மனையாள் ரபேக்கா

**யார் இந்த தேவதை! (தொ.நூ.24:24)**

ஆபிரகாமின் சகோதரர் நாகோரின் பேத்தி இவர்.

நாகோதரின் மகன் பெத்துவேலின் மகள் இவர்.

நாகோரின் மகன் லாபானின் தங்கை இவர்.

ஆபிரகாமின் மகன் ஈசாக்கின் மனைவி இவர்.

ஏசா, யாக்கோபு இவர்களின் தாய் இவர்.

**ரபேக்காவின் அழைப்பு! (24:1-61)**

- ➢ பொய்யான தெய்வங்களை மெய்யாக நினைத்த கானானியரை ஆபிரகாம் விரும்பவில்லை.
- ➢ இறைவன் வாக்களித்த நாட்டைவிட்டு வெளியே செல்வதை ஆபிரகாம் விரும்பவில்லை.
- ➢ தமது சமயத்தின் தூய்மை, சமயத்தின் புதுமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஆசித்தார் ஆபிரகாம்.

இம்மூன்று காரணங்களை முன்னிட்டும், தனது மகன் ஈசாக்கிற்கு கானானியப் பெண்ணை மணக்காமல், **உறவுக்காரப் பெண்ணைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்துவர,** பரிவாரங்களுடன் தனது முதன்மைப் பணியாளரை அனுப்பி வைக்கிறார் ஆபிரகாம். இவ்வாறாக நாகோர் நகரிலிருந்து ரபேக்கா அழைக்கப்படுகிறார்.

**ரபேக்கா என்பதன் பொருள் (24:16)**

எபிரேய மொழியில் ரபேக்கா என்றால் **'உறுதியாகக் கட்டுவது', 'என்றும் வசீகரம்',** என்றும் கூறப்படுகிறது. பெயருக்கேற்றபடி ரபேக்காவிடம் வசீகரமும், கவர்ச்சியும், துணிவும், நம்பிக்கையும் நிறைந்திருந்தது.

**ரபேக்கா எதிர்கொண்ட சவால்கள் :**

**• தெரியாத பகுதிக்குப் பயணம். (24:61)**

அழைக்க வந்தவரை அவர் விழிகள் ஒருபோதும் பார்த்ததில்லை. கானான் தேசத்தை அவர் கண்கள் கற்பனையிலும் கண்டதில்லை. இருப்பினும் காதால் கேட்டதை மட்டுமே நம்பி, சாதல்வரை வாழப்போகும் தன் கணவனுக்காய், பெற்றோரை விட்டு, உறவினர்களை விட்டு, சகோதரனை விட்டு, தோழிகளை விட்டு, தன் தேசத்தை விட்டு, புதிய மக்களிடத்தில், புதிய தேசத்தில், புதிய கலாச்சாரத்தில், புதிய உறவினர்களிடத்தில் வாழ, உற்சாகத்தோடு பயணமானார்.

**• மலடியாய் இருபது ஆண்டுகள் (25:21)**

ஈசாக்கின் மனைவியான ரபேக்கா இருபது ஆண்டுகள் பிள்ளைப்பேறு இல்லாது மனம் சோர்ந்தார். ஆகவே ஈசாக்கு, மலடியாய் இருந்த தன் மனைவிக்காக ஆண்டவரிடம் மன்றாடினார். ஆண்டவரும் அவர் மன்றாட்டைக் கேட்டருளினார்.

**• ஏமாற்றிய ரபேக்கா. (27:5-29)**

மூத்த மகனிடம் மூர்க்கத்தனம் நிறைந்திருந்ததால், இரக்கமுள்ள இளைய மகனுக்கு பிறப்புரிமையும், ஆசீர்வாதமும் கிடைக்க தன் கணவனையே ஏமாற்றத் தூண்டினார் ரபேக்கா.

**ரபேக்காவின் சிறப்பம்சம்.** ஒரு சிறந்த மனையாளிடம் இருக்க வேண்டிய அழகு, அறிவு, உழைப்பு, உதவி, துணிவு, பணிவு, விருந்தோம்பல், விடாமுயற்சி, இறைநம்பிக்கை, பிள்ளைப்பேறு ஆகிய பத்து சிறப்பம்சங்கள் ரபேக்காவிடம் இருந்தது.

1. **அழகு:** அவர் எழில்மிக்க தோற்றமுடையவர். (24:16)
2. **அறிவு:** பண்புடையவன் ஆசி பெறுவதே தகுதியும் நீதியுமானது என்று அறிவுப்பூர்வமாக முடிவெடுத்து செயல்பட்டவர். (25:27, 27:10)
3. **உதவி:** முன்பின் தெரியாதவருக்கும் உதவுகிறார். (24:44)
4. **உழைப்பு:** பலன் எதிர்பாராது, தாகம் தீர்த்துக் கொள்ள நினைத்த நபருக்கும், ஒட்டகத்திற்கும், ஓடிஓடி உழைக்கிறார். (24:20)
5. **துணிவு:** ஏறக்குறைய 500 மைல் (500கி.மீ) தொலைவில் உள்ள புதிய தேசத்திற்கு, புதிய நபரோடு துணிந்து செல்கிறார். (24:61)
6. **பணிவு:** ஈசாக்கைப் பார்த்து தன் கணவர் என்று தெரிந்தவுடன் பணிவுள்ள பெண்ணாக அவரை எதிர்கொள்கிறார். (24:64-65)
7. **விருந்தோம்பல்:** அவர்களை, ஆண்டவரின் ஆசி பெற்றவரே வருக! என்று அழைத்து, அவர்களுக்காக இடங்களைத் துப்புரவு செய்து, அவர்களது சுமையை இறக்கி, அவைகளுக்கு வைக்கோலும், தீவனமும் இட்டு, அவர்களுக்கு கைகால் கழுவத் தண்ணீர் கொடுத்து, பின் உணவு பரிமாறினர். (24:31-33) (இதே விருந்தோம்பல் முறையைத்தான் தமிழர்கள் நாம் இன்றும் பின்பற்றி வருகிறோம்)
8. **இறைநம்பிக்கை:** இறைநம்பிக்கையின் பேரில் கானான் தேசம் செல்ல ஒப்புக்கொள்கிறார். (24:58)
9. **விடாமுயற்சி:** மணமாகி இருபது ஆண்டுகள் மலடியாய் இருந்த ரபேக்கா விடாமுயற்சியுடன் ஆண்டவரில் நம்பிக்கை வைத்து தன் கணவருடன் இறைவேண்டல் செய்து பிள்ளைப்பேறு பெற்றார். (25:21)
10. **பிள்ளைப்பேறு:** ரபேக்கா கருத்தரித்து இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றார். (25:24)

**ரபேக்காவின் வாழ்நாள்:** தோராவைப் பயன்படுத்துவதன் மூலம், ரபேக்கா இறக்கும்போது 120 அல்லது 134 வயதுடையவர் என்பதை அறியலாம்.

**ரபேக்கா மனைவியருக்குச் சொல்லும் அன்புரை**

**ரபேக்கா மனைவியருக்குச் சொல்லும் அன்புரை.**

**அன்பை** அடிப்படையாகக் கொண்டதே திருமணம். ஆகவே **அன்புள்ள மனைவியரே!**

எண்ணத்தை அழகுபடுத்துங்கள்; **எழில்** தானே வரும்.

ஆன்மீகத்தை ஆழப்படுத்துங்கள்; **அறிவு** தானே வரும்.

**உதவு**வதில் உயர்தாழ்வு கூடாது.

**உழை**ப்பதில் ஆணவம், அகங்காரம் கூடாது.

**துணிவில்** தூய்மை தேவை.

**பணிவில்** பாசம் தேவை.

விருப்புடன் **விருந்தோம்பல்** செய்யுங்கள்.

இன்னலிலும் **இறைநம்பிக்கை** கொள்ளுங்கள்.

இன்பதுன்பம் இரண்டிலும் **விடாமுயற்சி** வேண்டும்.

**பிள்ளைவரத்திற்கு** நன்றி சொல்லுங்கள்; அவர்களுக்கு நல்வழி காட்டுங்கள்.

**அன்புள்ள மனைவியைத்தான் அகிலம் 'தாய்' என்றழைக்கும்.**

தொடரும்

# முதலிடங்களைத் தேடுவது, சமுதாயத்தைக் காயப்படுத்துகிறது.

தாழ்ச்சி எனற பண்பை நாம் இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இஞ்ஞாயிறன்று, புனிதபேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு வழங்கிய நண்பகல் மூவேளை செப உரையில் அழைப்பு விடுத்தார்.

பரிசேயர் ஒருவருடைய வீட்டில், விருந்துக்குச் சென்ற இயேசு, அங்கு பலர் விருந்தில் முக்கிய இடங்களைத் தேடியதைக் கண்டு, இரண்டு அறிவுரைகளை, உவமைகள் வழியே தந்ததைக் கூறும் நற்செய்தியை மையப்படுத்தி தன் மூவேளை செப உரையை வழங்கினார்.

முதலிடங்களைத் தேடிச் செல்வது, சமுதாயத்தைக் காயப் படுத்துகிறது என்பதை தன் உரையில் சுட்டிக் காட்டியத் திருத்தந்தை, இத்தகையச் செயல், உடன்பிறந்த உணர்வுக்கு ஊறு விளைவிக்கும் செயல் என்று எச்சரிக்கை விடுத்தார்.

முதலிடங்கள் என்பவை, நாம் தேடிச் செல்பவைகளாக இராமல், அவை நம்மைத் தேடி வருபவைகளாக, அதாவது பிறர் நமக்கு வழங்குபவைகளாக இருக்கவேண்டும் என்பதை, திருத்தந்தை தன் உரையில் எடுத்துரைத்தார். மேலும், பிரதிபலன் வேண்டும் என்று எண்ணாமல், வறியோர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரை இயேசு விருந்துக்கு அழைக்க வேண்டும் என்று இந்த ஞாயிறு நற்செய்தியில் கூறியதையும், புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்தோருக்கு நினைவுறுத்தினார் திருத்தந்தை.

## சாந்திநகர் தேம்பாவணித் தோட்டத்தில் பேராசிரியர் பா.வளன் அரசுக்கு ஆன்ம விடிவெள்ளி விருது வழங்கப்பட்டது

பாளையங்கோட்டை மறைமாவட்ட யூபிலி மேய்ப்புப் பணி நிலையத்தில் ஆன்மவியல் பள்ளிச் சிறப்புக் கூட்டம் நடை பெற்றது. அருள்மிகு அமல்ராசு அடிகளார் தலைமை தாங்கினார். தேம்பாவணித் தோட்ட இயக்குநர் அருள்மிகு முனைவர் ஞானப் பிரகாசம் அடிகளார் வரவேற்றுப் பேசினார். பேராசிரியர் பா.வளன் அரசு சமய நல்லிணக்கம், சமுதாயம் மறுமலர்ச்சி, இறையியல் வளர்ச்சி ஆகிய வற்றுக்கு ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டி, அவருக்கு "**ஆன்ம விடிவெள்ளி**" விருது வழங்கப் பட்டது. பேராசிரியர் பா.வளன் அரசு அவர்களுக்கு சர்வவியாபி ஆசிரியர் மற்றும் வாசகர் சார்பாக பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## விண்ணக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



அன்பின் ஊற்றே இறைவா! இவ்வுலகில் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாய் இருந்து, எங்களுக்கு இறை பக்தியையும் நல்ல பண்புகளையும் கல்வி அறிவையும் ஊட்டி வளர்த்த தியாக உள்ளம் கொண்ட எங்கள் அன்பு குடும்பத் தலைவியே, உம்மை நினைத்து கலங்குகின்றோம். இவரது ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா ஒளியையும் தந்தருள வேண்டுமென்று இரக்கம் நிறைந்த இயேசுவே உம்மை நோக்கி மன்றாடுகிறோம் - ஆமென்.

நினைவுத் திருப்பலி: 11-09-2019 புதன்கிழமை காலை 6.30 மணிக்கு சத்தியமங்கலம் கோடி அற்புதர் புனித பதுவை அந்தோனியார் ஆலயத்தில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக் காக அருள்திரு. M.கஸ்பார், பங்குதந்தை அருள்திரு. M.பிரான்சீஸ் இரட்சகதாஸ் SDB மற்றும் குருக்களுடன் கூட்டுத் திருப்பலி நிறை வேற்றப்படும். தாங்களும் செபிக்க வேண்டுகிறோம்.

**திருமதி. R. M. ரோஸ் மரி**

**மண்ணில் மலர்ந்தது: 12-02-1954**

**விண்ணில் மலர்ந்தது: 11-09-2017**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான் 11:25

பிரிவால் துயருறும்

**கணவர்: D.மகிமைதாஸ்** B.Lit.B.Ed., Rtd.H.M.

**மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**

**சத்தியமங்கலம்**

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு

தோற்றம்:22-07-1965



மறைவு: 12-08-2019

**திரு.S.மார்ட்டின் சேவியர்**

**10-09-2019 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணி அளவில, நெய்வேலி-வட்டம் 24, புனித காணிக்கை மாதா ஆலயத்திலும், மாலா 6 மணியளவில் வீராரெட்டிகுப்பம், புனித இடைவிடா சகாய அன்னை ஆலயத்திலும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நடைபெறும்.**

பிரிவால் துயருறும்

மனைவி: **M.** டெல்பின் டெனிஸ்மேரி

பிள்ளைகள்

**M.** டெனிஸ் செந்தமிழ் செல்வி

கில்பர்ட் பிரான்சிஸ்

**M.** ஜெனனி, மற்றும் உறவினர்கள்.

நெய்வேலி வட்டம்-12, C-56, TTK சாலை.

142 இளம் உள்ளங்களுக்கு

# வேண்டும் நலலாட்சி



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**அரசாட்சி:** கொடிய மிருகங்களை விட அடக்குமுறை அரசு அச்சத்திற்குரியது. - கான்ஃபூஸியஸ் (Confucius).

கான்ஃபூஸியஸின் இந்த மேற்கோளைவிட பொருத்தமான வேறு வார்த்தைகளே இல்லை. அதில் உள்ள சுய அனுபவம் மறுக்க முடியாத உண்மையாகும்.

**சீன தத்துவ மேதை:** ஒருமுறை புகழ் வாய்ந்த சீன தத்துவ மேதை கான்ஃபூஸியஸ் தன் சொந்த ஊரிலிருந்து வேறு ஊருக்குச் சென்று கொண்டிருந்தார். எப்போதும் போல அவருடைய மாணவர்கள் சிலரும் அவரோடு சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் அவரோடு தத்துவ ரீதியாக விவாதித்துக்கொண்டு சென்றார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே மிக ஆழமாகவும், ஆர்வமாகவும் தத்துவ தர்க்கத்தில் ஈர்க்கப்பட்டு ஈடுபட்டிருந்ததால், அவர்கள் ஓர் கல்லறைத் தோட்டத்தின் வழியாகச் செல்வதை அறியவில்லை.

**பெண்ணின் புலம்பல்:** அப்போது அங்கே புதிதாக எழுப்பப்பட்ட கல்லறையின் மீது ஒரு பெண் மிகப் பரிதாபமாக அழுது புலம்பிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அந்த நல்ல தத்துவ மேதை தன் மாணவர்களுடன் அந்தப் பெண் அருகே நின்றார். அவரின் இந்தச் சோகம் பற்றி காரணம் வினவிய போது, அந்தப் பெண் அழுது கொண்டே இவ்வாறு கூறினார்.

**தொடர்ந்த சோகம்:** "சில கால இடைவெளியில் நான் என் மாமனார், கணவர் மற்றும் மகனை இழந்துவிட்டேன்" என்றார். கான்ஃபூஸியஸ் இதைக் கேட்டு மிகவும் வருந்தியவராய், "அவர்கள் எப்படி இறந்தார்கள்?" என்று கேட்டார். அந்தப் பெண் துக்கம் தொண்டையை அடைக்க, "அவர்கள்..., அவர்கள் ஒரு புலியால் கொல்லப்பட்டார்கள்" என்று கதறியபடி கூறினாள். மேலும், "இந்தப் பகுதி முழுவதுமே புலிகளின் தொந்தரவினால் பாதிக்கப் பட்டுள்ளது" என்றார். அப்போது கான்ஃபூஸியசுடன் வந்த மாணவர்களில் ஒருவர், "சகோதரி, நீங்கள் ஏன் இந்தப் பகுதியை விட்டுச் சென்று விட கூடாது? என்று வினவினர்.

**நல்லாட்சி தத்துவம்:** அதற்கு அந்தப் பெண் கூறிய பதில் அவர்களைத் திகைக்க வைத்தது. அந்தப் பெண் சோகத்திலும் பெருமையுடன் கூறியது: "இங்கே நல்லாட்சி நடைபெறுகிறது. இங்கே உள்ள அரசு அதிகாரிகள் நல்லவர்களாகவும், இரக்கக் குணம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தாராள குணமுடையவர்களாகவும் உயர் சிந்தை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் மக்களிடம் பாகுபாடற்றவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் ஊழலற்றவர்கள். இங்கே மக்களின் நலனுக்காக அரசு இயங்குகிறது" என்றார். உடனே கான்ஃபூஸியஸ் தன் மாணவர்களைப் பார்த்து, "அந்தப் பெண்மணி சொல்வதன் அர்த்தம் புரிகிறதா?" என்றார். **"சில இடங்களில் அரசு அதிகாரிகளின் தொல்லைகள் புலிகளின் அட்டகாசத்தை மிஞ்சுவதாக உள்ளது!"**

# விவிலிய விடுகதைகள்



அருள்திரு. L. **ஆரோக்கியதாஸ்,**
உதவி பங்குதந்தை, பேராலயம், புதுவை.

விடுகதைகளை விரும்பாதோர் யாருமே இருக்க முடியாது. விடுகதைகள் என்பவை, ஒன்றை நேரிடையாகக் சொல்லாமல் மறைமுகமாகக் கூறி நம்மைச் சிந்திக்க வைப்பவையாகும். விடுகதைகள் மூலமாக ஒன்றை விளக்கும் போது, அது கேட்போர் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துவிடுகிறது. நாம் சிறு குழந்தைகளாக இருந்த போது கேட்ட விடுகதைகள் இன்றும் நம் நினைவில் நீங்காமல் நிற்கின்றன. எனவே, நம் குழந்தைகளுக்கு எளிதாக விவிலியத்தையும், மறையுண்மகளையும் போதிக்க விடுகதைகள் நமக்கு மிகவும் துணை நிற்கின்றன.

அந்த வகையில் சில வியப்பூட்டும் விவிலிய விடுகதைகளை இங்கே காண்போம்.

1) ஓடும் நீரின் ஓரத்தில்
ஓங்கி உயர்ந்த நாணலில்
ஒளிந்து கிடந்ததோர் பெட்டி
உள்ளே இருந்ததோ சுட்டி - அவன் யார்?

2) ஒரே கூட்டில் உலகத்தின் ஜோடிகள்
ஒன்று சேர்ந்து விளையாடின - அது என்ன?

3) உண்ணுகின்ற உணவிற்குள் உறங்கினான் ஒருவன் - அவன் யார்?

4) கட கட, மட மட, கண்டவர் வாய் பிளக்க, கட்டியவர் கதி கலங்க,கண்ட துண்டமாய் போனது கட்டிடம் - அது என்ன?

5) யானைக்கு அடி சருக்கும்! இவனுக்கோ முடி சருக்கும்- அவன் யார்?

6) இரண்டு எழுத்துப் பெண் மூன்று எழுத்து ஆணை மணந்து ஓபேதைப் பெற்றாள் - அவள் யார்?

7) வயிற்று பசி கண்ணை மறைக்க தன்னையிழந்து மண்ணை இழந்தான் மதிகேடன்- அவன் யார்?

8) ஆறடித் தேக்கு மரம் அஞ்சாமல் தாக்கும் மரம், அரசப் பழம் பட்டு அடியோடு சாய்ந்தது - அது என்ன?

9) குழிக்குள் விழுந்த வெள்ளிக் காசு, படியேறி பயண மாகி, சிறையில் சிதறி சிம்மாசனம் ஏறியது - அவன் யார்?

10) குட்டைக்கும் நெட்டைக்கும் சண்டையாம்
சண்டையில் குட்டை ஜெயித்ததாம் நெட்டையின் நெற்றிப்பட்டை கழன்றதாம் - அவன் யார்?

11) காடே வீடாக, தோலே மேலாக, எளிமையாய் எலியா வாய் இருந்தவர் யார்?

12) ஓடுவான் ஒதுங்குவான் ஒற்றை காலில் நிற்பான், ஆடுவான் அசைவான், ஆயனோடு ஆடுகளை அனுமதித்து அயலவரை அனுமதியான் - அவன் யார்?

13) உபசரிப்பில் சிறந்தவள் இவள், உபதேசம் கேட்பதில் சிறந்தவள் அவள் - யார் இவர்கள்?

14) வாரமிருமுறை நோன்பு தந்தும், வந்த வருவாயி லெல்லாம் பத்திலொரு பங்கு தந்தும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை - எவன் அவன்?

15) வெள்ளை வெளேர் என்று இருக்கும், வேண்டிய மட்டும் கிடைக்கும், அளவுக்கு மேல் அள்ளினால் அழிந்து போகும் - அது என்ன?

**1. மோயீசன், 2. நோவா பெட்டகம், 3. யோனா, 4. பாபேல் கோபுரம், 5. சிம்சோன், 6. ரூத் - மோவாபு, 7. ஏசா, 8. தாவீது - கோலியாத்து, 9. யோசேப்பு, 10. தாவீது கோலியாத்து, 11. திருமுழுக்கு யோவான், 12. ஆட்டு கொட்டில் வாயில், 13. மார்த்தா-மரியா, 14. பரிசேயன், 15. மன்னா**

## 19-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள் பவர் இறப்பினும் வாழ்வார்"
யோவான் - 11:25

இவரின் ஆன்ம இளைப் பாற்றிக்காக 15-9-2019 ஞாயிறு காலை 7.15 மணிக்கு திருப்பாதிரிப்பு லியூர், புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். அன்னாரின் ஆன்மா, இறை வனில் நித்திய இளைப்பாற்றி அடைய மன்றாடுவோம்.

*1 கர்.1மங்.1திரி.*

**திரு. M. ஏகாம்பரம் அருள்நாதன், M.A.,B.Ed**

(தலைமை ஆசிரியர் ஓய்வு)

தோற்றம்: 4-5-1938

மறைவு: 15-9-2000

பிரிவால் துயருறும்

**மனைவி, மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

கடலூர் - 2.

---

விண்ணக வாழ்வின்

## 17 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:01-07-1925



மறைவு: 08-09-2002

**திரு.இ.ஆரோக்கியசாமி**

வாழ்வின் ஊற்றாகிய இறைவா! எம்மோடு இருக்கும்போது, உம்மை எமக்கு சுட்டிக் காட்டி நாளும் உம்மிடம் எம்மை வழிநடத்தி உம் சித்தத்திற்கு பணிந்திருக்க பயிற்றுவித்த எம் தந்தை திரு. ***ஆரோக்கியசாமி***யின் ஆன்மா உம்மில் மகிழ்ந்திருக்க அருள் புரியும் - ஆமென்.

இவருக்காக 8-9-2019 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு சத்திய மங்கலம் புனித அந்தோனியார் ஆலயத் தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

**மனைவி: D. மேரி தெரேசாள்**

**பிள்ளைகள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.**

சத்தியமங்கலம்

---

## நினைவு அஞ்சலி

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு : 03-12-1934
இறப்பு: 25-03-2007



பிறப்பு : 05-12-1943
இறப்பு: 13-09-2018

**திரு.S.அந்தோனிராஜ்,** M.A.M.Ed,B.G.L.

தலைமை ஆசிரியர் (ஓய்வு)

**திருமதி.A.பெர்னெதெத் அம்மாள்**

"அவர்கள் அமைதிக்குள் சென்றடைகின்றனர். நேர்மையான வழிமுறையைப் பின் பற்றுவோர் தம் இறுதிப் படுக்கைகளில் இளைப்பாறுகின்றனர்" (எசாயா. 57:2)

திரு. S. அந்தோனிராஜ் தலைமை ஆசிரியர், இவரது மனைவி திருமதி. A. பெர்னெதெத் அம்மாள் ஆகியோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 14–09–2019 சனிக்கிழமை பகல் 11.00 மணிக்கு மதுராந்தகம், புனித அந்தோணியார் ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரக்குழந்தைகள்.**

மதுராந்தகம்.

---

## 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 15-04-1919



இறப்பு: 07-09-2009

**திரு. அ. அந்தோனிசாமி.**B.A.

**"சீரியதோர் பந்தயத்தில் ஓடினேன் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைப் பாதுகாத்தேன்." 2திமோ.4:7**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 07-09-2019 சனிக்கிழமை, கடலூர்-1, புனித கார்மேல் அன்னை ஆலயத்திலும்; கடலூர்-2, புனித சூசையப்பர் ஆலயத்திலும்; நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும்; காலை அரியாங் குப்பம், விசிடேஷன் சிற்றாலயத்திலும் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் வாடும்

**மனைவி, பிள்ளைகள்,**

**மகள்:**Sr.**அனிதா** FIHM, Visitation, Ariankuppam.

**பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 15-06-1932



இறப்பு: 11-09-2018

## லீலா (எ)
## லூர்துமரி எதுவார்

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"- யோவான்.11:25*

இறைவா, இவ்வுலகிலிருந்து அழைக்கப்பட்ட இவர்களின் ஆன்மாவை நித்திய வாழ்வில் சேர்த்து முடிவில்லா ஒளியில் என்றும் உம்மோடு இருக்கும்படி செய்தருளும் ஆமென்.

புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் 11-9-2019 புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும். அனைவரும் கலந்துகொண்டு ஜெபிக்க அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்*

மகன்: A. ராஜா (எ) இருதயநாதன்
A. மணி (எ) ஆபிரகாம் ஜோசப்
A. ரவி (எ) பிலிப் மர்செல்
சகோதரர்: எதுவார் சம்பத்
மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.

---

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி

Né le: 7-1-1917



Décédé le: 18-8-1989

## FORTUNE COJANDESSOU

Née le: 16-9-1915



Décédée le: 8-2-2009

## FORTUNE MARIE THERESE

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25*

இறைவா, இவ்வுலகிலிருந்து அழைக்கப்பட்ட இவர்களின் ஆன்மாவை நித்திய வாழ்வில் சேர்த்து முடிவில்லா ஒளியில் என்றும் உம்மோடு இருக்கும்படி செய்தருளும், ஆமென்.

புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் 08-9-2019, ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும். அனைவரும் கலந்துகொண்டு ஜெபிக்க அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்*

மகன்: Raphael, மருமகள்: பூந்தார்க்
பேரப்பிள்ளைகள்: **Annick, Diane, Paul**
புதுவை.

# கடவுளின் திட்டத்தில் தாவர உலகின் பயன்பாடு

அருட்திரு.V.S. **தோமினிக் சாவியோ,** பங்குதந்தை, பாத்திமாபாளையம்.

தாவர உலகம் மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் பல்வேறு விதங்களில் பயன்படுகின்றது. தாவர உலகம் அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதற்கான அடிப்படைக் காரணியாகவே உள்ளது. இந்த பூமியில் தாவர உலகம் இல்லாமல் எந்த உயிரினமும் வாழ முடியாது என்பதே மறுக்க முடியாத உண்மை. குறிப்பாக, மனிதனின் உணவு, உடை, இருப்பிடம், தொழில், வாழ்வு, வழிபாடு, கொண்டாட்டங்கள் என அனைத்தும் தாவர உலகத்தால் மட்டுமே நிறைவு செய்யப்படுகின்றன. விவிலியமும் இந்தத் தாவர உலகின் இன்றியமையாத பயன்பாட்டைப் பல்வேறு விதங்களில் விளக்குகின்றது. குறிப்பாக, உணவு தானியங்கள், பழங்கள், காய்கள், மூலிகைகள், வாசனைப் பொருட்கள் (தொநூ:25:34, விப:9:31, 23:11, 27:20, லேவி:2:1, 6:10, எண்:13:23, இணை:24:20, 32:16) எண்ணெய் வகைகள், பல்வேறு பயன்பாட்டிற்கான பொருட்கள் (தொநூ:6:14, விப:26:15, 36:20, லேவி:23:40) எனப் பல வகையான பயன்பாடுகளை விவிலியம் விளக்குகின்றது. தாவர உலகின் பயன்பாட்டைக் கீழ் வரும் மூன்று பிரிவுகளில் விரிவாகக் காணலாம்.

**அ. தாவர உலகம் உயிரினங்களின் உயிர் காக்கின்றது:** பசுமை இல்லையேல் உயிர்கள் இல்லை. பச்சைத் தாவரங்கள் உயிரினங்களின் உயிர் காக்கின்றது. அப்பொழுது கடவுள், ``மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன்; இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன் என்றார். அது அவ்வாறே ஆயிற்று (தொநூ:1:29-30).

உயிரினங்கள் இந்த உலகில் வாழ அடிப்படை வாழ்வாதாரமாக அமைவது தாவரங்கள். தாவரங்கள் இல்லையேல் உயிரினங்கள் இல்லை என்பதை விவிலியத்தின் மேற்கண்ட வார்த்தைகள் உறுதிசெய்கின்றன. கடவுள் தாவர உலகைப் படைத்து அதனை மனிதனுக்கும் விலங்கினங்களுக்கும் உணவாகக் கொடுத்தார். இங்கு நம் கவனத்தை ஈர்ப்பது என்னவெனில், கடவுளின் திட்டத்தில் மனிதன் மற்றும் விலங்குகள் அனைத்திற்கும் கடவுள் வழங்கிய உணவு சைவ உணவு என்பதே. காலப்போக்கில், குறிப்பாக மனிதனின் முதல் பாவம் மற்றும் அதற்கான தண்டனை, அழிவு இவற்றிற்கு பிறகு இந்த உணவு முறையில் மாற்றம் ஏற்படுவதை நாம் காண்கின்றோம் (தொநூ:9:1-6). இயற்கையை புறம் தள்ளிவிட்ட உணவு முறைக்கு இன்று நாம் எளிதாக மாறிவிட்டோம். இயற்கையில் இறைவன் வாரி வழங்கி இருக்கின்ற தானியங்கள், கீரைகள், பச்சைக் காய்கறிகள், பழவகைகள், மூலிகைகள் இவற்றையெல்லாம் விடுத்து, நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் இரசாயனங்களை உண்ணும் மக்களினமாக நாம் மாறிக்கொண்டிருப்பது கடவுளின் திட்டத்திற்கு எதிரானது, நம் உடலின் ஆரோக் கியத்திற்கும் எதிரானது. அது மட்டுமல்ல இரசாயனங்களைக் கொண்ட உணவு மனித இனத்தினை அழிவின் பாதைக்கு இட்டுச் செல்கின்றது என்பதிலும் எள்ளளவும் அய்யமில்லை.

இன்றைய இரசாயன உணவுப் பழக்கங்களே மனிதனின் உடலில் ஏற்படும் புற்றுநோய், மலட்டுத்தன்மை, அதீத உடல் பருமன், இளமையில் முதுமைத் தோற்றம் போன்ற பல்வேறு நோய்களுக்கு காரணம் என்பது கண்டறியப்பட்ட மருத்துவ உண்மை. தாவர உலகின் மூலமாகக் கடவுள் வழங்கிய உணவு வகைகள் உணவாக மட்டுமல்ல நோய்களுக்கு மருந்தாகவும் செயல்படுகின்றன. உணவே மருந்து, உணவிலே மருந்து என்பதுதான் கடவுளின் திட்டம். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து, வாளொடு முன்தோன்றிய மூத்தக்குடி என்ற பெருமைக்குரிய தமிழினம் கடவுளின் இந்தத் திட்டத்தின்படியே வாழ்ந்த பேரினம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்கை மருத்துவத்தில் உலகம் போற்றும் பெருங்கண்டமாக விளங்கியது சங்க கால குமரிக்கண்டம். ஆனால் அத்தகைய தமிழ்ப் பேரினமும் உணவே மருந்து என்ற இயற்கை உணவு முறையை இழந்துவிட்டது.

இன்றைய நவீன உலகில் மனிதன் எத்தனை விதமானச் செயற்கையான உணவுப் பொருட்களைக் கண்டுபிடித்து உண்டாலும் தாவரங்களிலிருந்து பெறப்படும் உணவு இல்லையேல் உயிரினங்கள் இந்த உலகில் வாழ இயலாது என்பது மறுக்க முடியாத உண்மையாகின்றது. சமீபகாலத்தில் இயற்கை உணவுகள் மீதான நாட்டம் மக்கள் மத்தியில் பெருகி வருவது கடவுளின் திட்டத்திற்கு ஏற்ப மக்களின் உணவுப் பழக்கம் மாறுவதற்கான ஒரு நல்ல தொடக்கம் எனலாம்.

**ஆ. கடவுள் வழிபாட்டில் தாவர உலகின் பயன்பாடு:**

இயற்கையை மனிதன் கடவுளாக வழிபட்ட மரபு உண்டு. சூரியன், நிலவு, கோள்கள், விண்மீன்கள், மரம், செடி, கொடிகள், விலங்குகள், பறவைகள் என அனைத்தையுமே கடவுளாக வழிபடும் ஆன்மீகம் பரவிக்கிடப்பதைக் காணமுடிகின்றது. இதில் இரண்டு விதமான உண்மை உண்டு: இயற்கைக்கும் இறைவனுக்கும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு இணக்கம் உண்டு என்பது ஒரு விதமான உண்மை. இயற்கையையும் இறைவனையும் பிரித்துப் பார்க்கின்ற அளவுக்கு மக்களின் ஆன்மீகம் தெளிவு பெறவில்லை என்பதும் மற்றொரு விதமான உண்மை. ஆனால் விவிலியம், இயற்கை - இறைவன் - மனிதன் இவர்களுக்கு இடையேயான உறவு நிலையை மிகத் தெளிவாகப் பதிவு செய்திருக்கின்றது. விவிலியத்தின் பின்னணியில் பார்க்கும்போது, நாம் காணும் இந்த இயற்கை முழுவதும் கடவுளின் அழகானப் படைப்பு என்பதும், கடவுள் தன் அழகையும், ஆளுமையையும், பராமரிப்பையும், பாதுகாப்பையும், வல்லமையையும், சக்தியையும் வெளிப்படுத்தும் கருவிதான் இயற்கை என்பதும் தெளிவாக விளங்குகின்றது (காண்.திபா:104, தானியேல் இணைப்பு:1:35-58).

மனிதன் கடவுளை வழிபட தாவர உலகின் பயன்பாடு மிக அவசியமாக உள்ளது. கோயில் கட்டுதல், அழகு வேலைப்பாடுகள் செய்தல், பலியிடுதல், காணிக்கைகள் செலுத்துதல், போன்ற பல்வேறு தேவைகளுக்கு மனிதன் தாவரங்களிலிருந்து பெறப்படும் பொருட்களையே பயன்படுத்துகிறான். இவற்றில் மரம், இலை, பூக்கள், காய்கள், கனிகள், புற்பூண்டுகள், விதைகள் மற்றும் அதன் எண்ணெய் போன்ற தாவர உலகின் பயன்பாடுகள் முக்கியமானவை. விவிலியமும் கடவுள் வழிபாட்டில் தாவர உலகின் பயன்பாட்டைச் சிறப்பான விதத்தில் பதிவு செய்திருக்கின்றது.

தொடரும்

**Published and Printed by** Rev.Fr.C.ANTONI ROCHE **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Rev.Fr.C.ANTONI ROCHE.
Manager : Very Rev. Msgr. A. Arulanandam.